**ஆனமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை ஆனமடுவை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொது களஞ்சியக் கணக்கிலிருந்து மாற்றப்பட்டிருந்த ரூபா. 410,750 பெறுமதியான வழங்கல் மற்றும் உபகரணங்கள் விநியோகம் மற்றும் உபகரணங்கள் ஆகியன கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்குரிய புறநகும திட்டத்தின் கீழ் பெறப்பட வேண்டிய ரூபா. 968,338 மீளாய்வாண்டில் வேறு வருமானங்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2016ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த வைப்பு வருமானமாகிய ரூபா. 239,920 வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 246,768 பெறுமதியான முத்திரைக் கட்டண வருமானம் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31ஆம் திகதியன்று நிர்மாணக் கடன்பட்டோர் ரூபா. 12,000,000 இனால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) மூலதன நன்கொடைகள் ரூபா. 5,000,000 திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் அத்தொகையினால் மூலதன நன்கொடைகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 59,152,954 தொகையான பெறவேண்டிய 08 கடன் மீதிகளில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,205,655 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,703,227 தொகையான செலுத்த வேண்டிய 09 கணக்கு மீதிகளில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாத ரூபா 2,999,060 ஐ தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 33 | 5,853,890 | சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் வீதவரி செலுத்தத் தவறியவர்களிற்குரிய சொத்துக்களை தடை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 572(1) | 354,150 | காலாவதியான வைப்புக்களை வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,180,393 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 59,849,724 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரி மற்றும் வரி | 5,113 | 5,015 | 3,663 | 6,287 | 4,970 | 5,017 | 3,576 | 4,935 |
| வாடகை | 14,159 | 10,840 | 10,384 | 1,839 | 12,668 | 9,817 | 10,530 | 1,383 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,438 | 1,005 | 1,005 | - | 837 | 1,305 | 1,305 | - |
| ஏனைய வருமானம் | 15,325 | 10,377 | 10,205 | 12,663 | 10,740 | 11,611 | 5,300 | 9,359 |

குறிப்பு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் அறவீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

கடந்த ஆண்டுகளில் நிலுவை வருமானத்துடன் கிடைக்க வேண்டிய முழு வீத வரி வருமானத்தில் நூற்றிற்கு 36 சதவீதம் மற்றும் வாடகை வருமானத்தில் நூற்றிற்கு 85 சதவீதம் மீளாய்வாண்டில் ஈட்டப்பட்டிருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) கடந்த ஆண்டின் இறுதியில் ரூபா 4,935,000 கூட்டுத்தொகையான வீதவரி மற்றும் வரிகளில் நிலுவை மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 6,287,000 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் வரி சேகரிப்பு தொடர்பான பொறுப்புக்கள் சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிட்ட ரூபா 4,959,647 தொகையான வீதவரிகளில் ஆண்டில் 50 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,482,569 ஆக சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) வாடகை மற்றும் குத்தகை வாடகை நிலுவை வருமானத்துடன் மீளாய்வாண்டின் போது 85 சதவீதத்திற்கு சமமான ரூபா 10,384,000 சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த அறவிடப்பட வேண்டிய ரூபா 432,008 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரின் 2017 திசெம்பர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,724,255 தொகையான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் ரூபா 6,103,308 தொகையான முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 29 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை**

2017 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த சுகாதார, சுகநலன் மற்றும் சுற்றாடல் நடவடிக்கைகள் மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவ செலவினம் 10 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

2017 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மற்றும் சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட சேவைகளாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான செயற்திட்டம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 06 செயற்திட்டங்களின் நிறைவேற்றல் முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

2017 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரூபா 7,500,000 தொகையான திட்டவட்டமான 06 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

திண்மக் கழிவு முகாமைத்துவத் செயற்திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சுமார் 02 தொன் கழிவுகள் ஒன்று சேர்க்கப்படுவதுடன் அதனை உபயோகித்து கொம்போஸ்ட் உற்பத்திக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா. 3,256,000 செலவிடப்பட்டு சபையின் பின்பகுதியில் கழிவுத் தொட்டியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அது 2017 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் செயலற்ற நிலையில் காணப்பட்டது. 2013 தொடக்கம் 2016 வரை மாகாண

நிலைபேறான ஒதுக்கீட்டின் கீழ் ரூபா. 2,456,334 செலவிடப்பட்டு இன்னுமொரு கழிவுத் தொட்டி செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் கீழ் நடமாடும் சேவைகளை நடாத்துதல், மனித வள முகாமைத்துவம், ஊழியர் மேம்பாடு உட்பட சிறு வீதிகள் அபிவிருத்தி உட்பட பொது உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகள் இணங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

சபையின் இரண்டாம் தரத்தின் பதவிகளில் 08 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையின் பதவிகளில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து அமைய/ சமயாசமய பதவிகளில் 07 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

2010 முதல் 2016 வரையான காலப்பகுதியில் வெவ்வேறு வகைகளுக்குரிய 04 ரூவாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.4 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

சபையின் உத்தியோகத்தரொருவர் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்காக 02 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கல் மற்றும் சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,644,138 தொகையான நிதிஏற்பாடு ஆண்டில் ரூபா 1,165,439 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) உணவு பானங்கள் மற்றும் சீருடைகளில் 51 சதவீதமும் மருத்துவ வழங்கலில் 70 சதவீதமும், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிலிருந்து 85 சதவீதமும் நிர்மாண பொருட்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களில் 100 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான சேகரிப்பு | நிலுவை வருமான சேகரிப்பிற்காக பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பதவியணியினர் | காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) நிலைபேறான அபிவிருத்தி | நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்காக சுட்டிகள் இணங்காணப்பட்டிருக்கவில்லை. |